## ஆவின் பால் விற்பனையகத்தில் ரூ. 20 ஆயிரம் திருட்டு

**திருச்சி, மே 14:** திருச்சி அருகே ஆவின் பால் விற்பனையகத்தில் ரூ. 20 ஆயிரம் திருடுபோனது செவ்வாய்க்கிழமை தெரியவந்தது.

திருச்சி காட்டூர் பகுதியில் இரண்டு ஆவின் பால் விற்பனை நிலையங்கள் உள்ளன. இவற்றை வழக்கம்போல விற்பனை முடிந்து உரிமையாளர்கள் திங்கள்கிழமை பூட்டிச்சென்றனர். செவ்வாய்க்கிழமை காலை வந்துபார்த்தபோது, கடைகளின் பூட்டுகள் உடைக்கப்பட்டிருந்தன. உள்ளே சென்று பார்த்தபோது, கடைகளில் வைக்கப்பட்டிருந்த ரூ. 20 ஆயிரம் திருடு போனது தெரியவந்தது. புகாரின் பேரில் திருவெறும்பூர் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து, அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## மண்ணச்சநல்லூர் சிவன் கோயில் உண்டியல் காணிக்கை ரூ. 6 லட்சம்

**மண்ணச்சநல்லூர், மே 14:** திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் பூமிநாத சுவாமி கோயிலில் செவ்வாய்க்கிழமை உண்டியல் காணிக்கை எண்ணப்பட்டதில் ரூ 6 லட்சத்து 59 ஆயிரத்து 814 காணிக்கையாக கிடைக்கப் பெற்றது.

இக்கோயிலில் செவ்வாய்க்கிழமை உண்டியல் காணிக்கை எண்ணும் பணி நடைபெற்றது. இதில், திருப்பைஞ்ஞீலி ஞீலிவனேஸ்வரர் கோயில் செயல் அலுவலர் மனோகரன் மற்றும் கோயில் பணியாளர்கள் ஈடுபட்டனர். அப்போது, பக்தர்களின் காணிக்கை மூலம் ரூ. 6 லட்சத்து 59 ஆயிரத்து 814 கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவித்தனர்.

## தொங்கி நின்ற பேருந்து



மணப்பாறை அருகே செவ்வாய்க்கிழமை கட்டுப்பாட்டை இழந்து கிணற்றின் பக்கவாட்டுச் சுவரில் தொங்கி நிற்கும் பேருந்து. இந்த விபத்தில் கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த 15 பேர் லேசான காயமடைந்தனர்.

## பெங்களூரு, சென்னையை தொடர்ந்து திருச்சியிலும் 'நம்ம யாத்ரி' அறிமுகம்

**திருச்சி, மே 14:** பெங்களூரு, சென்னை பெருநகரங்களைத் தொடர்ந்து திருச்சியிலும் 'நம்ம யாத்ரி' செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசின் வர்த்தக அமைச்சகத்தால், மின் வணிகத்துக்கான உந்துதலை அதிகரிக்கும் வகையில் ஓஎன்டிசி நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துகிறது.

இருந்த இடத்தில் இருந்து ஆட்டோ, கார் புக்கிங் செய்ய பெரு நிறுவனங்கள் வாடிக்கையாளர்களிடம் அதிக கட்டணம் வசூலிக்கும் நிலையில், அரசின் போக்குவரத்துத் துறை நிர்ணயித்துள்ள கட்டணத்தை வசூல் செய்வதை மட்டுமே ஊக்குவிக்கும் வகையில் இந்த செயலி தொடங்கப்பட்டுள்ளது.

பெங்களூருரில் நாளொன்றுக்கு 1.25 லட்சம் வாடிக்கையாளர்களுக்கு சேவை அளிக்கிறது. இதன் தொடர்ச்சியாக சென்னையில் அறிமுகம் செய்யப்பட்டு ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களை ஈர்த்துள்ளது. தற்போது, திருச்சியில் மே 14ஆம் தேதி முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

'நம்ம யாத்ரி' செயலி நிறுவனமும், உரிமைக் குரல் ஓட்டுநர் தொழிற்சங்கம், சாலைப் போக்குவரத்து தொழிற்சங்கம் ஆகியவை இணைந்து இந்த செயலியை திருச்சியில் செவ்வாய்க்கிழமை அறிமுகம் செய்தன. இந்த செயலியை பொதுமக்கள், வாடகை வாகன ஓட்டுநர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆட்டோ கட்டணமாக கி.மீ. ஒன்றுக்கு ரூ.15, கார் கட்டணமாக கி.மீ. ஒன்றுக்கு ரூ. 21 முதல் என வாகன இருக்கை வசதிகளுக்கு தகுந்த கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

நிறுவனத்தின் மேலாளர் சதீஷ், சாலைப் போக்குவரத்து சங்க மாவட்ட செயலர் சந்திரன், உரிமைக்குரல் ஓட்டுநர் சங்க மாநிலப் பொதுச் செயலர் ஜாகிர் உசேன் ஆகியோர் இந்த செயலியை அறிமுகம் செய்தனர்.

## பத்தாம் வகுப்பு துணைத் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்பு

**திருச்சி, மே 14:** திருச்சி மாவட்ட மைய நூலகம் மற்றும் வாசகர் வட்டம் இணைந்து நடத்தும் பத்தாம் வகுப்பு தேர்வில் தவறியவர்களுக்கான துணைத் தேர்வு இலவச பயிற்சி வகுப்புகள் மே 18-ஆம் தேதி முதல் தொடங்கப்பட உள்ளது.

மாவட்ட மைய நூலகத்தில் இப்பயிற்சியானது, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும். மற்ற நாள்களில் கட்செவி அஞ்சல் குழுக்களில் நாள்தோறும் வினா, விடைகள் பகிரப்படும். மாவட்ட மைய நூலகத்தில் நடைபெறும் பயிற்சியில் பங்கேற்போர் தங்களது பெற்றோர்களுடன், பாட புத்தகங்கள், நோட்டு, பேனா கொண்டு வர வேண்டும். பத்தாம் வகுப்பு தேர்வு எழுதாதவர்களும் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளலாம்.

பயிற்சியில் பங்கேற்கவிருப்பமுள்ளவர்கள், ஆதார் நகல், பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் நகலுடன் மாவட்ட மைய நூலகத்துக்கு நேரில் வந்து தங்களது பெயரை பதிவு செய்துகொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு ஒருங்கிணைப்பாளர் 63836 90730 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும். மாணவர்களுக்கு வகுப்பெடுக்க தன்னார்வலர்களும் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம் என திருச்சி மாவட்ட மைய நூலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து

**திருச்சி, மே 14:** திருச்சி அடுக்குமாடி குடியிருப்பில் சமையல் எரிவாயு உருளையில் செவ்வாய்க்கிழமை தீப்பிடித்தது.



திருச்சி மன்னார்புரத்திலுள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பிலுள்ள ஒரு வீட்டில் செவ்வாய்க்கிழமை விருந்து உபசரிப்பு நடைபெற்றது. இதற்காக வீட்டின் சமையலறையிலேயே இரண்டுக்கும் மேற்பட்ட சிலிண்டர்கள் மற்றும் அடுப்புகளைக் கொண்டு சமையல் பணி நடைபெற்றது. திடீரென சிலிண்டரில் பொருத்தப்பட்டிருந்த ரெகுலேட்டர் பகுதியில் தீப்பற்றியது. சிறிதுநேரத்தில் தீ மளமளவென பற்றி எரியத் தொடங்கியது.

தகவலின்பேரில், அங்கு விரைந்து வந்த திருச்சி தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை மாவட்ட உதவி அலுவலரும், கன்டோன்மென்ட் நிலைய அலுவலருமான ப. சத்தியவர்த்தன் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர். இதனால், பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

இதுகுறித்து தீயணைப்புத் துறையினர் கூறியது: விருந்து போன்ற நிகழ்ச்சிகளுக்கு வீட்டுக்குள், குறிப்பாக அடுக்குமாடி குடியிருப்புகளில் சமையலறைகளில் வைத்து சமைப்பதை தவிர்க்க வேண்டும். இல்லையேல், பெரும் விபத்துகளை எதிர்கொள்ள நேரிடும் என்றனர்.

## அனுமதியின்றி சரளை மண் எடுத்து வந்த இருவர் கைது

**திருச்சி, மே 14:** திருச்சி அருகே கொணலை பகுதியில் லாரிகளில் அனுமதியின்றி சரளை மண் ஏற்றி வந்த இருவரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

திருச்சி மாவட்டம், கொணலை பகுதியில் சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் கிராம நிர்வாக அலுவலர் சோமசுந்தரம் தலைமையிலான வருவாய்த்துறையினர் செவ்வாய்க்கிழமை வாகனச் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, சரளை மண் ஏற்றி வந்த இரு டிப்பர் லாரிகளை நிறுத்தி சோதனையிட்டனர். சோதனையில், லாரிகளில் உரிய அனுமதியின்றி சுமார் 12 யூனிட் சரளை மண் கடத்திச் சென்றது தெரிவந்தது.

இதையடுத்து கிராம நிர்வாக அலுவலர் தலைமையிலான வருவாய்த்துறையினர், லாரிகளையும், லாரிகளை ஓட்டி வந்த மண்ணச்சநல்லூர் வட்டம், இருங்களூர் ஏரிக்கரையைச் சேர்ந்த ஆ. நெல்சன் ராஜ் (25), கொணலை தெற்கு தெருவைச் சேர்ந்த அ. சதீஷ் (30) ஆகிய இருவரையும் பிடித்து சிறுகனூர் காவல்நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதன் பேரில் சிறுகனூர் போலீஸார் வழக்குப் பதிந்து, லாரிகளை பறிமுதல் செய்ததுடன், இருவரையும் கைது செய்து விசாரிக்கின்றனர்.

### வெயில் அளவு

14-5-2024 (டிகிரி- பாரன்ஹீட்)

| | |
|---|---|
| திருச்சி | 96 |
| தஞ்சை | 95 |
| புதுக்கோட்டை | 95 |
| கரூர் | 98 |
| பெரம்பலூர் | 94 |
| அரியலூர் | 93 |

## சாலை விபத்தில் வட மாநில தொழிலாளி உயிரிழப்பு

**திருச்சி, மே 14 :** திருச்சியில் செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த சாலை விபத்தில் வடமாநிலத் தொழிலாளி உயிரிழந்தார்.

பிகார் மாநிலம், கட்டுக்காரா பகுதியைச் சேர்ந்த சிவாராயன் ஹாவ் மகன் தர்மேந்திரா ஹாவ்(28). இவர், திருவெறும்பூர் அரசு தொழில்நுட்ப பயிற்சி மையத்தில் (ஐடிஐ) நடந்து வரும் கட்டடப் பணிகளில் வேலை பார்த்து வந்தார். இந்நிலையில், செவ்வாய்க்கிழமை இவர் திருச்சி-தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் திருவெறும்பூர் பகுதியில் நடந்து சென்றார். அப்போது, திருவெறும்பூரிலிருந்து துவாக்குடி நோக்கிச் சென்ற கார் அவர் மீது மோதியது. இதில் பலத்த காயமடைந்த தர்மேந்திரா ஹாவ் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவலறிந்து வந்த திருவெறும்பூர் போலீஸார் உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## தனியார் பள்ளிகளின் 663 வாகனங்கள் ஆய்வு



திருச்சியில் செவ்வாய்க்கிழமை தனியார் பள்ளி வாகனங்களை பார்வையிட்டு ஆய்வு செய்த ஆட்சியர் மா. பிரதீப்குமார்.

**திருச்சி, மே 14:** திருச்சியில் செவ்வாய்க்கிழமை தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 663 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

திருச்சி மாவட்டம், கூத்தூர் விக்னேஷ் வித்யாலயா பள்ளி மைதானத்தில் செவ்வாய்க்கிழமை தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 600-க்கும் மேற்பட்ட வாகனங்கள் ஆய்வுக்குள்படுத்தப்பட்டன. ஆட்சியர் மா. பிரதீப்குமார் தலைமையில், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், வருவாய்த்துறையினர், காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர், பள்ளிக் கல்வித்துறையினர் இணைந்து ஆய்வில் ஈடுபட்டனர்.

பின்னர், ஆட்சியர் கூறியது: இதில் 663 வாகனங்கள் ஆய்வுக்குள்படுத்தியதில் 153 வாகனங்கள் தகுதிச் சான்று பெறாமல் உள்ளன. அவை உரிய சான்று பெற்ற பிறகே இயக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது என்றார் அவர்.

இந்த சோதனையின்போது, ஓட்டுநர்களுக்கு இலவச கண்பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. தீயணைப்புத்துறை மூலம் தீத்தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வாகனங்களில் உள்ள தீயணைப்பு கருவிகளை பயன்படுத்தும் வழிகள் குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. 108 ஆம்புலன்ஸ் பணியாளர்கள் மூலம் முதலுதவி சிகிச்சை அளிப்பது குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில், கோட்டாட்சியர்கள், தட்சிணாமூர்த்தி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் குமார் மற்றும் பள்ளிக்கல்வித்துறை, தீயணைப்புத்துறை, காவல்துறை, போக்குவரத்துத் துறை, வருவாய்த் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## பெயிண்டர் தூக்கிட்டுத் தற்கொலை

**திருச்சி மே 14 :** திருச்சியில் திங்கள்கிழமை பெயிண்டர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

திருச்சி கீழ தேவதானம் வீரமுத்து நகரைச் சேர்ந்தவர் அ. ஆனந்தகுமார் (23) பெயிண்டர். இவருக்கு மதுப் பழக்கம் உள்ளதால் அடிக்கடி குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் விரக்தி அடைந்த ஆனந்தகுமார் திங்கள்கிழமை வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் வேஷ்டியால் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

புகாரின் பேரில் திருச்சி கோட்டை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


Dalmia Bharat Sugar

## DALMIA BHARAT SUGAR AND INDUSTRIES LIMITED

Regd. Office : Dalmiapuram - 621 651, Distt. Tiruchirapalli (Tamil Nadu)
Phone : 011 23465100, Fax (011) 23313303
Email : sec.corp@dalmiasugar.com . Website : www.dalmiasugar.com . CIN : L15100TN1951PLC000640

Extract of Audited Consolidated Financial Results for the quarter and year ended 31-03-2024

(₹ in Crore except earning per share data)

| S.No. | Particulars | For the quarter ended | | | For the year ended | |
|---|---|---|---|---|---|---|
| | | 31-03-2024 | 31-12-2023 | 31-03-2023 | 31-03-2024 | 31-03-2023 |
| | | Audited | Unaudited | Audited | Audited | Audited |
| 1 | Total Income from Operations | 787.24 | 610.12 | 1161.65 | 3027.98 | 3327.66 |
| 2 | Net Profit/ (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items.) | 106.54 | 95.65 | 175.67 | 363.41 | 355.57 |
| 3 | Net Profit/ (Loss) for the period before Tax (After Exceptional and/or Extraordinary items.) | 106.54 | 95.65 | 175.67 | 363.41 | 355.57 |
| 4 | Net Profit/ (Loss) for the period after Tax (After Exceptional and/or Extraordinary items.) | 91.32 | 64.92 | 124.16 | 272.47 | 250.07 |
| 5 | Total Comprehensive Income for the period [comprising profit/(Loss) for the period (after tax) and other comprehensive income (after tax)] | (1.47) | 27.34 | 157.41 | 265.66 | 378.63 |
| 6 | Equity Share Capital | 16.19 | 16.19 | 16.19 | 16.19 | 16.19 |
| 7 | Earning per Share (face value of ₹ 2 each) | | | | | |
| a) | Basic | 11.28 | 8.02 | 15.34 | 33.66 | 30.90 |
| b) | Diluted | 11.28 | 8.02 | 15.34 | 33.66 | 30.90 |

**Standalone Financial Results**

| S.No. | Particulars | 31-03-2024 | 31-12-2023 | 31-03-2023 | 31-03-2024 | 31-03-2023 |
|---|---|---|---|---|---|---|
| 1 | Total Income from Operations | 768.19 | 607.28 | 1161.65 | 3006.08 | 3327.66 |
| 2 | Net Profit (Loss) for the period before Tax | 108.59 | 92.84 | 175.67 | 362.66 | 355.57 |
| 3 | Net Profit (Loss) for the period after Tax | 93.37 | 62.11 | 124.16 | 271.72 | 250.07 |

**Notes :-**

1 The financial results are approved by the Board of Directors at their meeting held on May 14, 2024 after being reviewed and recommended by the audit committee. The statutory auditors have carried out the audit of these financial results and have given an unmodified opinion.

2. On Feb 02, 2024, the board of Directors had declared interim dividend @ 3.75 per equity share (face value of ₹ 2 per equity share), for financial year ended 31 March 2024. Further the Board of Directors in its meeting held on May 14, 2024 has recommended a final dividend @ ₹ 1.25 per equity share (face value of ₹ 2 per equity share), for financial year ended 31 March 2024 subject to approval of shareholders in ensuing annual general meeting.

2 The above is the extract of the detailed format of quarterly/yearly financial results filed with the stock exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the financial results is available on the Stock Exchange websites, www.nseindia.com, www.bseindia.com and on the Company website www.dalmiasugar.com.

For Dalmia Bharat Sugar and Industries Limited

Place: New Delhi
Date: May 14, 2024

B B Mehta
Whole Time Director

US TO RAISE LEVIES ON PORT CRANES

# Biden adds tariffs on Chinese chips, EVs

JOSH WINGROVE
May 14

**PRESIDENT JOE BIDEN** is hiking tariffs on a wide range of Chinese imports — including semiconductors, batteries, solar cells, and critical minerals — in an election-year bid to bolster domestic manufacturing in critical industries.

The US will also raise levies on port cranes and medical products, in addition to previously reported increases on steel, aluminum, and electric vehicles. The changes are projected to affect around $18 billion in current annual imports, the White House said.

"Today, we serve our statutory goal to stop the PRC's harmful technology transfer-related acts, policies, and practices, including its cyber intrusions and cyber theft," US Trade Representative Katherine Tai said. The moves represent Biden's most comprehensive update to the China tariffs first imposed by his predecessor, former President Donald Trump, and a recognition that a hawkish approach to trade with Beijing remains popular with US voters.

None of Trump's tariffs will be reduced. Biden will ratchet up rates on goods the US struggled to import during the coronavirus pandemic, and for key industries — like chips and green energy — that he's sought to bolster since he took office. Still, Biden must strike a careful balance. Additional tariffs risk increasing prices for consumers already hurting from inflation, and inspiring the ire of China, which could choose to retaliate in kind.

China "resolutely opposes" the US president's decision to raise tariffs on Chinese imports and sees the move as "political manipulation," according to Beijing's Ministry of Commerce. —BLOOMBERG

### HIKE ON IMPORTS

- The changes are projected to affect around $18 billion in current annual imports
- The moves represent Biden's most comprehensive update to tariffs first imposed by ex-president Donald Trump
- Biden will ratchet up rates on goods the US struggled to import during pandemic



# Pak to privatise most state-owned firms: PM

**PAKISTAN WILL PRIVATISE** all state-owned enterprises, with the exception of strategic entities, Prime Minister Shehbaz Sharif said on Tuesday, broadening its initial plans to sell only loss-making state firms to shore up its shaky finances.

The announcement came after Sharif headed a review meeting of the privatisation process of loss-making state enterprises, according to a statement from his office, which discussed a roadmap for privatisation from 2024 to 2029. "All of the state-owned enterprises will be privatised whether they are in profit or in losses," Sharif said, adding that offloading the companies would save taxpayers' money. The statement didn't clarify which sectors would be deemed strategic and non-strategic.

The announcement came a day after an IMF mission opened talks in Islamabad for a new long-term Extended Fund Facility, following Pakistan's completion of a $3 billion standby arrangement last month. —PTI

## RESULTS CORNER

### Alibaba Q4 profit plunges 86%, misses estimates

CHINA'S ALIBABA GROUP reported an 86% fall in fourth-quarter profit on Tuesday primarily due to valuation changes from equity investments, pushing its US-listed shares down almost 6% in early trading though revenue beat forecasts.

It also announced it would revive a plan first floated in 2022 to upgrade its secondary listing in Hong Kong to a primary listing, while retaining its primary listing in New York. It aims to complete this dual-primary listing by August. —REUTERS

### Foxconn's profit jumps 72% in Q1

APPLE SUPPLIER FOXCONN reported a 72% rise in Q1 profit, boosted by strong demand for AI servers and coming off a low base from the same period a year earlier, but the growth was lower than expected.

### Vodafone annual profit rises 2%

VODAFONE REPORTED A 2.2% rise in organic earnings for 2024, meeting market forecasts, after it returned to top-line growth in Q4 helped by gains in Britain & Germany. Vodafone was delivering growth in all its markets, said CEO.

### Sony posts 7% fall in annual profit

SONY GROUP POSTED a 7% fall in annual operating profit on Tuesday, hit by the performance of its financial business. Profit for the year ended March was $7.67 bn, in line with an average estimate from 23 analysts polled by LSEG.


## DALMIA BHARAT SUGAR AND INDUSTRIES LIMITED

Dalmia Bharat Sugar

Regd. Office : Dalmiapuram - 621 651, Distt. Tiruchirapalli (Tamil Nadu)
Phone : 011 23465100, Fax (011) 23313303
Email : sec.corp@dalmiasugar.com . Website : www.dalmiasugar.com . CIN : L15100TN1951PLC000640

Extract of Audited Consolidated Financial Results for the quarter and year ended 31-03-2024

(₹ in Crore except earning per share data)

| S.No. | Particulars | For the quarter ended | | | For the year ended | |
|---|---|---|---|---|---|---|
| | | 31-03-2024 | 31-12-2023 | 31-03-2023 | 31-03-2024 | 31-03-2023 |
| | | Audited | Unaudited | Audited | Audited | Audited |
| 1 | Total Income from Operations | 787.24 | 610.12 | 1161.65 | 3027.98 | 3327.66 |
| 2 | Net Profit/ (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items.) | 106.54 | 95.65 | 175.67 | 363.41 | 355.57 |
| 3 | Net Profit/ (Loss) for the period before Tax (After Exceptional and/or Extraordinary items.) | 106.54 | 95.65 | 175.67 | 363.41 | 355.57 |
| 4 | Net Profit/ (Loss) for the period after Tax (After Exceptional and/or Extraordinary items.) | 91.32 | 64.92 | 124.16 | 272.47 | 250.07 |
| 5 | Total Comprehensive Income for the period [comprising profit/(Loss) for the period (after tax) and other comprehensive income (after tax)] | (1.47) | 27.34 | 157.41 | 265.66 | 378.63 |
| 6 | Equity Share Capital | 16.19 | 16.19 | 16.19 | 16.19 | 16.19 |
| 7 | Earning per Share (face value of ₹ 2 each) | | | | | |
| a) | Basic | 11.28 | 8.02 | 15.34 | 33.66 | 30.90 |
| b) | Diluted | 11.28 | 8.02 | 15.34 | 33.66 | 30.90 |

Standalone Financial Results

| S.No. | Particulars | 31-03-2024 | 31-12-2023 | 31-03-2023 | 31-03-2024 | 31-03-2023 |
|---|---|---|---|---|---|---|
| 1 | Total Income from Operations | 768.19 | 607.28 | 1161.65 | 3006.08 | 3327.66 |
| 2 | Net Profit (Loss) for the period before Tax | 108.59 | 92.84 | 175.67 | 362.66 | 355.57 |
| 3 | Net Profit (Loss) for the period after Tax | 93.37 | 62.11 | 124.16 | 271.72 | 250.07 |

Notes :-

1 The financial results are approved by the Board of Directors at their meeting held on May 14, 2024 after being reviewed and recommended by the audit committee. The statutory auditors have carried out the audit of these financial results and have given an unmodified opinion.

2. On Feb 02, 2024, the board of Directors had declared interim dividend @ 3.75 per equity share (face value of ₹ 2 per equity share), for financial year ended 31 March 2024. Further the Board of Directors in its meeting held on May 14, 2024 has recommended a final dividend @ ₹ 1.25 per equity share (face value of ₹ 2 per equity share), for financial year ended 31 March 2024 subject to approval of shareholders in ensuing annual general meeting.

2 The above is the extract of the detailed format of quarterly/yearly financial results filed with the stock exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the financial results is available on the Stock Exchange websites, www.nseindia.com, www.bseindia.com and on the Company website www.dalmiasugar.com.

For Dalmia Bharat Sugar and Industries Limited

Place: New Delhi
Date: May 14, 2024

B B Mehta
Whole Time Director





A TRACK-RECORD OF STRONG PERFORMANCE

SEL TIGER 550D TMT REBAR | TIGER WIRE+ | TIGER stirrups

Extract of Consolidated Audited Financial Results for the Quarter and Year ended 31st March, 2024

CONSOLIDATED (Rs. in Cr.)

| PARTICULARS | Quarter Ended 31.03.2024 | Quarter Ended 31.12.2023 | Quarter Ended 31.03.2023 | Year Ended 31.03.2024 | Year Ended 31.03.2023 |
|---|---|---|---|---|---|
| | Audited | Unaudited | Audited | Audited | Audited |
| Total income from operations (net) | 3606.20 | 3315.29 | 3427.97 | 13195.22 | 12658.07 |
| Earning before Interest, Depreciation and Amortisation, Share in Profit / (Loss) of associates and Joint Venture and Tax | 492.73 | 447.28 | 450.30 | 1729.00 | 1603.88 |
| Net Profit(+)/Loss(-) before tax | 331.85 | 225.64 | 274.94 | 939.80 | 1036.90 |
| Net Profit(+)/Loss(-) for the period after tax | 219.94 | 125.80 | 253.96 | 1029.00 | 843.49 |
| Total Comprehensive Income for the period {comprising profit/(loss) for the period after tax and other comprehensive income after tax} | 198.61 | 168.69 | 249.54 | 1095.92 | 859.00 |
| Paid up Equity Share Capital (Face Value Rs.10/- per share) | NA | NA | NA | 278.04 | 255.08 |
| Other Equity | — | — | — | 9368.63 | 7020.88 |
| Earnings Per Share (EPS) (Not to be annualised) (a) Basic (Rs.) | 7.94 | 4.93 | 9.96 | 39.54 | 33.07 |
| (b) Diluted (Rs.) | 7.91 | 4.93 | 9.96 | 39.46 | 33.07 |

1. The above is an extract of the detailed format of the Standalone and Consolidated Financial Results for the Quarter and Year ended March 31, 2024 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of these Financial Results are available on the Stock Exchange Websites www.bseindia.com and www.nseindia.com and on the Company's website www.shyammetalics.com

2. The above results have been reviewed by the Audit committee at its meeting held on May 14, 2024 and approved by the Board of Directors at its meeting held on May 14, 2024

3. The Board of Directors at its meeting held on May 14, 2024 recommended a Final Dividend of Rs 2.70 per equity share of Rs 10/- each amounting to Rs 75.37 Crores for the financial year 2023-24

Extract of Standalone Audited Financial Results for the Quarter and Year ended 31st March, 2024

STANDALONE Rs. in Cr.

| PARTICULARS | Quarter Ended 31.03.2024 | Quarter Ended 31.12.2023 | Quarter Ended 31.03.2023 | Year Ended 31.03.2024 | Year Ended 31.03.2023 |
|---|---|---|---|---|---|
| | Audited | Unaudited | Audited | Audited | Audited |
| Total income from operations (net) | 1758.92 | 1757.51 | 1810.44 | 6668.45 | 6264.16 |
| Net Profit(+)/Loss(-) before tax | 148.63 | 111.52 | 91.80 | 456.04 | 297.37 |
| Net Profit(+)/Loss(-) for the period after tax | 110.31 | 80.04 | 123.01 | 351.40 | 299.03 |

Place: Kolkata
Date: 14.05.2024

For Shyam Metalics and Energy Limited
Sd/-
Mahabir Prasad Agarwal
Chairman
DIN - 00235780

SHYAM METALICS AND ENERGY LIMITED
Registered Office : Trinity Tower, 7th Floor, 83 Topsia Road, Kolkata - 700 046
Ph: 033-4016-4000/4001, E-Mail: compliance@shyamgroup.com,
Website: www.shyammetalics.com, CIN: L40101WB2002PLC095491

SHYAM METALICS ORE TO METAL ™



## zomato

Zomato Limited
CIN : L93030DL2010PLC198141
Registered office- Ground Floor, 12A, 94 Meghdoot, Nehru Place, New Delhi- 110019, India
Telephone- 011-40592373, Email- companysecretary@zomato.com, Website- www.zomato.com

Extract of consolidated financial results for the quarter (unaudited) and year (audited) ended March 31, 2024

INR crores

| S.No. | Particulars | Quarter ended | | | Year ended | |
|---|---|---|---|---|---|---|
| | | March 31, 2024 | December 31, 2023 | March 31, 2023 | March 31, 2024 | March 31, 2023 |
| | | Unaudited[1] | Unaudited | Unaudited[1] | Audited | Audited |
| 1 | Total income | 3,797 | 3,507 | 2,227 | 12,961 | 7,761 |
| 2 | Profit/ (loss) for the period/ year (before tax and exceptional items) | 161 | 124 | (204) | 291 | (1,015) |
| 3 | Profit/ (loss) for the period/ year before tax (after exceptional items) | 161 | 124 | (204) | 291 | (1,015) |
| 4 | Profit/ (loss) for the period/ year after tax (after exceptional items) | 175 | 138 | (188) | 351 | (971) |
| 5 | Total comprehensive income/ (loss) for the period/ year | 215 | 149 | (162) | 406 | (1,070) |
| 6 | Paid-up share capital | 868 | 857 | 836 | 868 | 836 |
| 7 | Other equity[2] as on March 31, 2023 | | | | | 18,624 |
| 8 | Earnings/ (loss) per equity share (INR)[3] (face value of INR 1 each) | | | | | |
| | (a) Basic | 0.20 | 0.16 | (0.23) | 0.41 | (1.20) |
| | (b) Diluted | 0.20 | 0.16 | (0.23) | 0.40 | (1.20) |

[1] The figures of the fourth quarter are the balancing figures between audited figures in respect of the full financial year and published year to date figures upto the third quarter of the relevant financial year. Also, the figures upto the end of third quarter were only reviewed and not subjected to audit.

[2] The Company does not have any revaluation reserve.

[3] EPS is not annualised for the quarter ended March 31, 2024; December 31, 2023 and March 31, 2023.

Notes:

(a) Exceptional item includes:

INR crores

| Particulars | Quarter ended | | | Year ended | |
|---|---|---|---|---|---|
| | March 31, 2024 | December 31, 2023 | March 31, 2023 | March 31, 2024 | March 31, 2023 |
| | Unaudited | Unaudited | Unaudited | Audited | Audited |
| Gain on sale/ disposal of investment | - | - | (0) | - | (0) |
| Total | - | - | (0) | - | (0) |

(b) Standalone information:

INR crores

| Particulars | Quarter ended | | | Year ended | |
|---|---|---|---|---|---|
| | March 31, 2024 | December 31, 2023 | March 31, 2023 | March 31, 2024 | March 31, 2023 |
| | Unaudited[4] | Unaudited | Unaudited[4] | Audited | Audited |
| Total income | 2,093 | 2,018 | 1,411 | 7,542 | 5,507 |
| Profit/ (loss) for the period/ year (before tax and exceptional items) | 435 | 385 | 182 | 1,411 | 117 |
| Profit/ (loss) for the period/ year before tax (after exceptional items) | 396 | 385 | 182 | 1,372 | 117 |
| Profit/ (loss) for the period/ year after tax (after exceptional items) | 396 | 384 | 182 | 1,371 | 117 |

[4] The figures of the fourth quarter are the balancing figures between audited figures in respect of the full financial year and published year to date figures upto the third quarter of the relevant financial year. Also, the figures upto the end of third quarter were only reviewed and not subjected to audit.

(c) The above is an extract of the detailed format of quarterly financial results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the quarterly financial results are available on the websites of National Stock Exchange of India Limited (www.nseindia.com), BSE Limited (www.bseindia.com) and the Company (www.zomato.com).

For and on behalf of the board of directors of Zomato Limited

Date: May 13, 2024
Place: Gurugram

Sd/-
Deepinder Goyal
Managing Director and Chief Executive Officer
(DIN-02613583)